# (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

ஓ.எஸ்.எண்.122/2018 நாள்.09.01.2023

2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09ம் நாள் பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சொக்கலிங்கம் | தொழில் | |
| த. பெ./க.பெ. | கன்னிகவுண்டர் | சாதி | |
| கிராமம் | மேல்மலையனூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 60 |

**பி.வா.சா.1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

I. 13.03.1991 தேதியில் சிவலிங்கம் என்பவருக்கு 1ம் வாதி எழுதிக்கொடுத்த கிரைய பத்திரமான பி.சா.ஆ. 1 ஆவணத்திற்கும் இவ்வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. மேற்படி சொத்திற்கும் சேர்த்து பட்டா உள்ளதால் பி.சா.ஆ. 1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். 19.05.1952 ல் தஞ்சம்மாள் என்பவரிடம் இருந்து நான் பெற்ற கிரைய பத்திரம் பி.சா.ஆ. 2 ல் பட்டா என் பெயரில் உள்ளதால் தாக்கல் செய்துள்ளேன். 04.03.1993 தேதியில் நான் எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தமான பி.சா.ஆ. 3 ன் படி கிரையம் பெற நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி ஆவணத்தில் உள்ள சொத்து 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் இருந்ததால் அவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன். 1992 ல் எங்கள் குடும்பத்தில் கூர் சீட்டு ஏற்பட்டதால் பாகம் பிரியவில்லை என்று நான் சொல்லுவது தவறு என்றால் சரியல்ல.

II. பி.சா.ஆ. 3 கிரைய ஒப்பந்தத்திற்கு ரூ. 9,500/- முன் பணம் கொடுத்தேன் . அதை திருப்பி கேட்கவில்லை. பி.சா.ஆ. 3 கிரைய ஒப்பந்தம் 1ம் வாதி எழுதி தரவில்லை என்றாலும், அதை நான் ஜோடித்துக் கொண்டேன் என்றாலும் சரியல்ல. 1ம் வாதி கிரைய ஒப்பந்தம் எழுதி தரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தப்படி கிரையம் எதுவும் தரவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ. 4 போகிய பத்திரத்தை நான் பதிவு செய்யவில்லை. பி.சா.ஆ. 4 போக்கிய பத்திரத்தின் சொத்து விவரத்தில் திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ. 4 போகிய பத்திரத்தில் சர்வே எண். 55/2 ல் 1.85 ல் எனக்கு 85 சென்ட் உரிமையானது என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி 85 சென்ட் உரிமையானது இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

III. பி.சா.ஆ. 4 ஆவணத்தில் சர்வே எண். 57/4 ல் 3.05 ல் 1.15 செண்ட் எனக்கு உரிமையானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்ணில் எனக்கு 1.15 செண்ட்டுக்கு மேல் சொத்து வரும். பி.சா.ஆ. 4 போகிய பத்திரம் சரியான சொத்து விவரம் எழுதாமல் நானாகவே ஏற்படுத்தி கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ. 4 ஆவணம் பதிவு செய்யபடாததால் அதை ஏற்றுக்கொள்ள கூடாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ. 6 பட்டா வில் உள்ள சொத்துக்கள் அனைத்து எனக்கு உரிமையானது ஆகும். பி.சா.ஆ. 6 பட்டாவில் வழக்கு சொத்தும் அடங்கியுள்ளது. மேற்படி ஆவணத்தில் சிவலிங்கம், தஞ்சம்மாள் ஆகியோர் கிரையம் பெற்ற சொத்தும் அடங்கியுள்ளது. மேற்படி பட்டாவில் சர்வே எண். 55/2 எ சிவலிங்கம் கிரையம் பெற்ற சொத்தாகும். மேற்படி பட்டாவில் 55/2 டி ல் 55 செண்ட் மட்டும் எனக்கு சொத்தமானது. சர்வே எண். 55/2 இ எனக்கு சொத்தமானது. 57/4 எ ல் சடையகவுண்டரின் கிரைய சொத்தும், பாக சொத்தும், தஞ்சம்மாள் கிரைய சொத்தும் அடங்கியுள்ளது.

IV. பி.சா.ஆ. 6 பட்டா என் பெயரில் உள்ளதால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் எனக்கு சொந்தமானது என்று கூறுகிறேன். பட்டாவில் கண்டுள்ள 1, 2, 4 அயிட்டங்களில் 22.03.2004 ல் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பி.சா.ஆ. 6 குறிப்பிடப்பட்டுள்ளது. 16.05.2005 பட்டாவில் உள்ள 3 வது அயிட்ட சொத்து பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கூர் சீட்டு, போகிய பத்திரம் ஆகிய தவறான ஆவணங்களை கொண்டு என் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. 17.02.1995 ல் நானும், சடைய கவுண்டரும் ஏற்படுத்தி கொண்ட பாக பத்திரத்தில் கண்ட சொத்துக்கள் மட்டும் தான் எனக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. மேற்படி பாக பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்து எனக்கும், எனது சகோதர, சகோதிரிகளுக்கும் பாக்கியமானது என்றால் சரிதான். மேற்படி பாக பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் அளவிற்கு மேல் நான் பட்டா பெற்று கொண்டு வாதிகளுக்கு பாத்தியமான சொத்தில் பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல.

V. சடையகவுண்டரும் நானும் ஏற்படுத்தி கொண்ட பாக பத்திரத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு மேல் நான் உரிமை கொண்டாடியதால் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் வாதிகளுக்கு மட்டும் உரிமையானது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.